நாள்: 10.06.2025
SC 17/2021
பெயர் தங்கராஜ்
அ.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

கொத்தனார்கள் 2.00 மணிக்கு வேலை முடித்து சென்றுவிட்டார்கள், அதன் பின்னர் ஆஜர் எதிரிகள் கட்டிய கட்டிடத்தில் கடப்பாறையால் இடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் கட்டிடம் எதுவும் இல்லை என்றும், அது எதிரிகளால் இடிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கட்டிடம் இருந்தது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை தேனி கவிலக்கு மருத்துவமனையில் வைத்து 4 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். 2,3 எதிரிகள் என்னை பிடித்துக்கொண்டு 1ம் எதிரி குத்தினார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். புகாரிலும், என் மகன் அசா1 சாட்சியத்திலும் சொல்லாத சங்கதியை எதிரிகளுக்கு தண்டனை வாங்கிகொடுக்கும் என்பதற்காக 2,3 எதிரிகள் என்னை பிடித்துக்கொண்டார்கள் என புதிதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கம்பம் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் நான் சம்பவம் சம்மந்தமாக விபரம் சொன்னேன். கம்பம் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் இரண்டு நபர்கள் என்னை பிடித்துக்கொண்டார்கள், 1ம் எதிரி குத்தினார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். இத்தோடு செத்து தொலைந்து போடா என 3 எதிரிகளும் சொன்னார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தேனி அரசு மருத்துவமனையில் இருக்கும் போது என்னை விசாரித்து போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான் மருத்துவமனையில் சிசிக்சை முடிந்து வந்த பின்னர் வீட்டில் வந்து போலீசார் என்னை விசாரித்தாக்ள. என்னை வீட்டில் விசாரிக்கும் போது என்னை குத்தியை கத்தியை பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் கம்பம் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போதும், சிசிக்சை முடிந்து வரும் போதும் கம்பம் வடக்கு காவல் நிலைய போலீசார் என்னை வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய உடையில் இரத்தம் படிந்திருந்தது. நான் குடியிருக்கும் வீட்டில் சம்பவம் நடந்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் நடந்தது. போலீசார் இரத்தம் பட்ட எனது சட்டை, துண்டு ஆகியவற்றை மருத்துவமனையில் வைத்து

வாங்கிகொண்டார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் என் மகன் இல்லை என்றும், மருத்துவமனையில் தான் என்னை வந்து பார்த்தார் என்றால்



சரியல்ல. என் மகன் சம்பவ இடத்தில் இருந்தார். கம்பம் அரசு மருத்துவமனையிலிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக 2.00 மணிக்கு மேல் தேனி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். தேனிக்கு செல்லும் போது என் மகன் உடன் வரவில்லை. என் மகன் என்ன விபரம் சொல்லி புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு சாபொ 1 ஆயுதத்தால் எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றும், 1ம் எதிரி கத்தியைக் கொண்டு என்னை குத்தவில்லை என்றும், மருத்துவரிடம் ஒரு கூர்மையான பொருளினால் காயம் எற்பட்டதாக கூறிவிட்டு பின்யோசனை செய்து கத்தியால் காயம்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கத்தி சாதாரணமாக அனைத்து இடங்களிலும் கிடைக்கும் என்றால் சரிதான். கட்டிடம் கட்டியதாக சொல்லும் இடத்தில் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பின் யோசனை செய்து எதிரிகள் மீது பொய் வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி எந்த வேலைக்கும் செல்லக்கூடாது என்பதற்காக அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்லல. இதற்கு முன்பு இந்த வழக்கு புகாரை தவிர வேறு புகார் ஏதும் எதிரிகள் மீது கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.